சுயமாக ஓட்டி செல்ல

# திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாடகை கார்கள்

## விரைவில் எழும்பூர் ரெயில் நிலையத்திலும் அறிமுகம்

சென்னை, டிச.14-

சென்னை மெட்ரோ ரெயில் பயணிகள் நலன் கருதி 'ஜூம் கார்' நிறுவனம் திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் சோதனை அடிப்படையில் 15 கார்களை வாடகைக்கு நிறுத்தி உள்ளது. இந்த கார்களை மெட்ரோ ரெயில் பயணிகள் சுயமாக ஓட்டி செல்லும் வகையில் நியாயமான கட்டணத்தில் வாடகைக்கு விடப்படுகிறது. கார்கள் மணி கணக்கு, நாள் மற்றும் வாரம் அடிப்படையில் வாடகைக்கு அளிக்கப்படுகிறது. பயணிகள் செல்லும் தூரத்துக்கு ஏற்ப கார்களில் எரிபொருள் நிரப்பியும், தேவையில்லை என்றால் நிரப்பாமலும் வழங்கப்படுகிறது. தேவைப்படுபவர்கள் www.zoomcar.com என்ற இணையதளம் மற்றும் 'ஜூம்கார்' செல்போன் செயலியில் தகவல்களை தெரிவிக்க வேண்டும். பின்னர் ரூ.5 ஆயிரம் முன்பணம் செலுத்திவிட்டு தங்களுக்கு தேவையான கார்களை வாடகைக்கு எடுத்து செல்லலாம். திருமங்கலத்தில் பயணிகளின் வரவேற்பை தொடர்ந்து எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் இந்த வசதி அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி உள்ளது.